---

## விழிப்புலனற்றவர்களிற்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்- 2012

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து விழிப்புலனற்றவர்களிற்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விழிப்புலனற்ற மகளிர் நலன்புரி நிலையத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 104,485 தொகையான முடிவுப் பொருள் இருப்பு, விற்பனை விலையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,383,233 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்கள் 05 நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நாட்குறிப்புப் பதிவுகள் பொறுப்பான உத்தியோகத்தரினால் கையொப்பமிடப்படாதிருந்ததுடன் அதற்காக நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 392,854 தொகையான பொறுப்புக்கள் கணக்கு வைக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் செலவினம் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் மிகை ரூபா 392,854 இனால் அதிகரித்திருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு

ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 22,176 தொகையும், 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 23,000 தொகையும் ஆக ரூபா 45,176 கூட்டுத்தொகையான பணம் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 56,889 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 11,713 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மிகையும் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | கடன்கொடுத்தோர் | 854,344 | கடன்கொடுத்தோர் பதிவேடு |
| (ஆ) | செலுத்த வேண்டிய செலவினம் | 776,301 | விபரமான பட்டோலை |
| (இ) | பருவ கால நாளிதழ் வெளியீடு | 108,000 | மதிப்பீடும் விலைப்பட்டியலும் |
| (ஈ) | கண்களுக்காகக் கிடைக்கின்ற விண்ணப்பம் | - | உரிய பதிவேடு |
| (உ) | தும்புத்தடி செயற்திட்டம் | 60,000 | தெரிவுசெய்யப்பட்ட பயிற்சி பெறுபவர்களின் பெயர்ப் பட்டியல் |
| (ஊ) | எழுதுகருவிகள் | 32,000 | விலைப்பட்டியல் |
| (எ) | முகாமைத்துவக் குழுக்கூட்டத்திற்காக வழங்கப்பட்ட முற்பணம் | 63,000 | மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | பல்கலைக்கழக மாணவர் உதவுதொகை செலுத்துதல் | - | உரிய பதிவேடு |
| (ஐ) | விழிப்புலனற்ற பல்கலைக்கழக மாணவர் உதவுதொகை | 129,000 | கையொப்பப் பதிவேடு |
| (ஒ) | இலங்கை விழிப்புலனற்ரோர் சேவைச் சபை நடாத்துகின்ற புனர்வாழ்வு செயற்திட்டத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான கொடுப்பனவு | | |
| (i) | ஆலோசனைக் கொடுப்பனவு | 161,000 | வரவுப்பதிவேடு சமூக சேவை உத்தியோகத்தர் அல்லது பொறுப்பான உத்தியோகத்தர் மேற்பார்வை செய்ததற்கான உறுதிப்படுத்தல் |
| (ii) | மாணவர் கொடுப்பனவு | 45,625 | |

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | விழிப்புலனற்ற மகளிர் நலன்புரி நிலையத்தில் நூல் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு ரூபா 180,000தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) நி.பி. 396(டீ) | வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்துள்ள ரூபா 18,300 பெறுமதியான 10 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 606,747 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 1,862,057 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,468,804 அதிகரிப்பினைக் காண்பித்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | பௌதீக | | நிதி | | செயல் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் | உள்ளவாறான | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் | உள்ள வாறான | பௌதீக | நிதி |
| | | | ரூபா | ரூபா | % | % |
| வியைாட்டு உதவித்தொகை நபர்கள் | 15 | 01(விழிப்புலனற்ற கிரிகெட் சங்கத்திற்கு) | 50,000 | 50,000 | 7 | 100 |
| தொழிற் பயிற்சி(ஆலோச னையாளர் படி) | 04 | 03 | 230,000 | 149,000 | 75 | 65 |
| கல்வி மற்றும் கலாசார உதவி | 250 | 177 | 1,700,000 | 916,000 | 71 | 54 |
| புனர்வாழ்வு உதவித்தொகை | பார்வையற்றோர் சேவைச் சபை<br>நடமாடமுடியாத மற்றும் இயலாத ஆலோசனையாளர் படி<br>விழிப்புலனற்றோர் சம்மேளனம் | பார்வையற்றோர் சேவைச் சபை<br>நடமாடமுடியாத மற்றும் இயலாத ஆலோசனையாளர் படி<br>விழிப்புலனற்றோர் சம்மேளனம் | 900,000 | 942,434 | - | 105 |
| விழிப்புலன் மற்றும் விழிப்புலன் சிகிச்சை | 100 | 78 | 850,000 | 705,859 | 78 | 83 |
| விழிப்புலனற்ற மகளிர் நிலையம் | 08 | 04 | 400,000 | 444,988 | 50 | 111 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விழிப்புலனற்ற 15 பேர்களுக்காக 2012 ஆம் ஆண்டில் விளையாட்டு உதவித் தொகைகளை வழங்குவதற்கு ரூபா 50,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் விழிப்புலனற்றோரின் கிரிகெட் சங்கத்திற்கு அந்த ரூபா 50,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 250 மாணவர்களுக்காக ரூபா 1,700,000 தொகை கல்வி உதவித்தொகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 179 மாணவர்களுக்காக ரூபா 916,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதன் நிதிசார் செயலாற்றல் 71.6 சதவீதமாக இருந்ததுடன் பௌதீக செயலாற்றல் 53.9 சதவீதமாக இருந்தது.

(இ) பல்கலைக்கழக மாணவர்களுக்கு 2012 ஏப்ரல் முதல் திசெம்பர் வரை ரூபா 485,000 தொகையான மாணவர் உதவு தொகை செலுத்துதல் தாமதமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை விழிப்புலனற்ற மக்கள் சம்மேளத்தினால் நடாத்தப்படுகின்ற அனுராதபுரம் மஹமீகஸ்ஸேகம விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தில் 2012 ஆம் ஆண்டின் செலவினங்களுக்காக ரூபா 490,948 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அக்கொடுப்பனவுகளின் போது கிராம உத்தியோகத்தர், சமூகசேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளரினால் அதில் வாழ்ந்து வந்த நபர்களின் எண்ணிக்கை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் பின்வரும் செயற்பொறுப்புக்கள் அவர்களால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

i. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் அவற்றின் செலாற்றல் தொடர்பான விபரங்களை நிதியத்திற்கு வழங்குதல்.

ii. விழிப்புலனற்ற மக்கள் சம்மேளனத்தில் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii. செயற்திட்டம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 08 நபர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 04 பேர்களுக்கு மாத்திரம் பயிற்சியளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பௌதீக செயலாற்றல் 50 சதவீதமாக இருந்தது.

### 3.2 பதவியணியினர்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயலாளர் பதவியில் செயலாற்றுகின்ற உத்தியோகத்தரின் முறையான நியமனக் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நம்பிக்கை நிதியத்திற்காக 2005 ஒக்தோபர் 24 ஆந் திகதிய டீஎம்எஸ்/டபிள்யூஈ மற்றும் எஸ்டபிள்யூ/16 ஆம் இலக்க கடிதங்களின் மூலம் எழுதுவினைஞர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் செயலாளர் பதவிக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டில் குறிப்பிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் மற்றும் உள்ளபடியான வருமானங்களையும் செலவினங்களையும் ஒப்பீடுசெய்த போது 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

(அ) மாணவர் உதவுதொகைகளை செலுத்துதல்

(ஆ) ஆலோசனைப் படிகள்

(இ) விழிப்புலனற்றோர் புனாவாழ்வு செயற்திட்டம்.

(ஈ) விழிப்புலனற்ற பெண்கள் நலன்புரி நிலையம்